# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.7778/விசாரணை/09</u>

**<u>விசாரணை நாள் 22.09..2009</u>**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. கே.பி. பிரகாஷ்<br>548, முதல் தெரு, காந்திபுரம்<br>கோயம்புத்தூர் – 641 012. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>உதவி இயக்குநர் அலுவலகம்<br>கதர் கிராமத் தொழில்கள்<br>கோயம்புத்தூர் – 18. |

---

இவ்வாணையத்தில் இன்று (22.09.2009) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. கே.பி. பிரகாஷ் வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. கே. திருவள்ளுவன், மாவட்ட குடிசைத் தொழில் ஆய்வாளர், உதவி இயக்குநர் அலுவலகம், கதர் கிராமத் தொழில்கள், அவிநாசி ரோடு, கோயம்புத்தூர் – 18 அவர்கள் வந்திருந்தார்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 28.01.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் பகுதி–1ல் – 11, பகுதி–2ல் 11, பகுதி–3ல் – 11 மற்றும் பகுதி–4ல் – 10 இனங்களுக்குமாக ஆக மொத்தம் 43 இனங்களுக்கு தகவல்கள்

வழங்குமாறு விண்ணப்பித்திருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் கிடைக்கப் பெறாததால், சட்டப்பிரிவு 19(1)ஐ பயன்படுத்தி முதல் மேல்முறையீடு செய்யாமல், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 30.03.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு இன்றைய விசாரணைக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது மனுதாரர் வராத நிலையில், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் 4 பகுதிகளில் கோரிய 43 இனங்களுக்குமுள்ள தகவல்களை 17.04.2009 அன்று ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பியதாகவும், அனுப்பிய தகவல்களின் நகலை இவ்வாணையத்தின் முன் சமர்ப்பித்ததன் அடிப்படையில், இவ்வழக்கில் மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றுப் பெறுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.10.2009
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவி பதிவாளர்.

<u>வழக்கு எண்.7778/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
உதவி இயக்குநர் அலுவலகம்
கதர் கிராமத் தொழில்கள்
கோயம்புத்தூர் – 18.

திரு. கே.பி. பிரகாஷ்
548, முதல் தெரு, காந்திபுரம்
கோயம்புத்தூர் – 641 012.